Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, MAY 13, 2024

திங்கட்கிழமை மே 13, 2024 | ஒளி: 09 கதிர் 250 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## கப்பல் சேவை ஒத்திவைப்பு

இலங்கையின் காங்கேசன்துறை மற்றும் இந்தியாவின் நாகப்பட்டினத்திற்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவையை மே மாதம் 13ஆம் திகதி மீள ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் தற்போது மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அந்த கப்பல் சேவைகள், மே மாதம் 17ஆம் திகதி தொடக்கமே ஆரம்பிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த படகு சேவை தனியார் நிறுவனத்தின் முகாமைத்துவம் குறித்த விடயத்தை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

அந்த செய்தி குறிப்பில், சில சட்டரீதியான அனுமதிகள் காரணமாகவும்,தாமதமான கப்பலின் வருகையினாலும் எமது திட்டமிட்ட நாகை-காங்கேசன்- நாகை பயணிகள் கப்பல் சேவையினை 13/05/2024 முதல் 16/05/2024 இயக்கமுடியவில்லை.

சேவையினை 17/05/2024இல் இருந்து இயக்குவதற்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதாக அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## ஆங்கில வினாத்தாளை அனுப்பிய ஆசிரியர் கைது

**அம்மாவிடமும் விசாரணை; 1,025 பேருக்கு பகிர்ந்தமை அம்பலம்**

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில், வியாழக்கிழமை (09) நடைபெற்ற ஆங்கில வினா தாளை வட்ஸ்அப் ஊடாக அனுப்பியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் பிரத்தியேக வகுப்பு ஆசிரியர் (டியூஷன் மாஸ்டர்) கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள், கண்டி-கட்டுகஸ்தோட்டை பகுதியில் வைத்தே சந்தேகநபரை ஞாயிற்றுக்கிழமை (12) கைது செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2

ஜனாதிபதித் தேர்தலில்

## “பொது வேட்பாளர்; பயனற்ற விடயம்”

**அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு; ரணிலுக்கே ஆதரவு என்கிறார்**



நிதர்ஷன் வினோத்

பொது வேட்பாளர் விடயம் என்பது தமிழ் மக்களுக்கு பயனற்ற விடயம். அதை முன்னெடுப்பது தோல்வியிலேயே முடியும் என மக்கள் வெளிப்படையாக கூறத் தொடங்கியுள்ளனர் என தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தம்மை பீடித்திருந்த போலித் தேசியம் என்ற மாயை அரசியலிலிருந்து தமிழ் மக்கள் படிப்படியாக வெளிச்சத்தக்கு வருவதை உணர்த்துகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## “என்னை நிறுத்தாவிடின் தமிழர் வரமுடியாது”

ஏ.எச்.ஹஸ்பர்



தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தினால் அதில், தன்னை நிறுத்தா விட்டால் சிங்கள வேட்பாளர் ஒருவர் தான் ஜனாதிபதியாக முடியும் தமிழர் வரமுடியாது என இலங்கை தமிழரசு கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

திருகோணமலை - ஈச்சிலம்பற்று பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (12)இடம் பெற்ற மக்கள் சந்திப்பின் பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## மைத்திரி இராஜினாமா; விஜயதாஸ நியமனம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய தவிசாளராக ஜனாதிபதி சட்டத்தரணியும் நீதியமைச்சருமான விஜயதாஸ ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கட்சியின் உறுப்புரிமையில் இரந்து இராஜினாமா செய்ததையடுத்து, ஏற்பட்ட வெற்றிடத்துக்கே விஜயதாஸ ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் பதில் தவிசாளராக கீர்த்தி உடவத்த நியமிக்கப்பட்டுள்ளார். கோட்டையில், ஞாயிற்றுக்கிழமை (12) இடம்பெற்ற விசேட கூட்டத்திலேயே மேற்படி தீர்மானங்கள் எட்டப்பட்டுள்ளன.

## கல்முனை போராட்டத்துக்கு 4,000 பேர் வலு சேர்த்தனர்




வி.ரி.சகாதேவராஜா, எஸ்.அஷ்ரப்கான்

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மீதான நிருவாக அடக்குமுறைகளைக் கண்டித்து பொதுமக்கள் சிவில் அமைப்புக்கள் கல்முனை வடக்கு பிரதேச செயலக முன்றலில் நடத்தி வரும் போராட்டம் திங்கட்கிழமையுடன் (13) ஐம்பது நாட்களை எட்டுகிறது. அதையொட்டி ஞாயிற்றுக்கிழமை (12) பாரிய மனித பேரணி கல்முனை நகரில் இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

## ‘தன்சல்’களுக்கு விசேட சலுகை




வெசாக் பண்டிகையை முன்னிட்டு, ஏற்பாடு செய்யப்படும் தன்சல்களுக்கான உணவுப் பொருட்களுக்கு விசேட தள்ளுபடி வழங்க தீர்மானித்துள்ளதாக லங்கா சதொச அறிவித்துள்ளது.

இதன்படி, இம்மாதம் 17ஆம் திகதிக்கு முன்னர், அருகாமையிலுள்ள லங்கா சதொச கிளைக்கு தன்சல் ஏற்பாட்டாளர்கள் முன்பதிவுகளை செய்யுமாறு லங்கா சதொச மேலும் தெரிவிக்கின்றது.

## “எமது தரப்பினர் விலைபோக மாட்டார்கள்”



நாட்டின் பல பகுதிகளில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், வாய்ச்சாடல் தலைவர்கள் தமது கட்சிக்கு கிடைத்த பணத்தைப் பயன்படுத்தி சமூக ஊடகங்கள் மூலம் சேறுபூசும் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறான அரசியல் விளையாட்டுக்களுக்கு அடிமைகளாக மாற வேண்டாம். இவ்வாறு ஒருமுறை அடிமைகளாக மாறியமையினாலயே நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம்:

## மொட்டு அடுத்த வாரம் தீர்மானம்


ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக முன்மொழியப்பட்டுள்ள தொழிலதிபர் தம்மிக்க பெரேரா உட்பட நால்வர் தொடர்பில் எதிர்வரும் வாரத்தில் மேலும் கலந்துரையாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசத்திடம் வினவிய போது, ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் மேலும் கலந்துரையாடப்படும் என தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளரை அறிவிப்பதில் அவசரமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## “இரட்டைக் குடியுரிமை எம்.பிக்கள் 10 பேர் உள்ளனர்”



இரட்டைக் குடியுரிமை கொண்ட 10க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் தற்போது பாராளுமன்றத்தில் உள்ளனர்.

தேர்தலுக்கு முன்னர் அந்த எம்.பிக்கள் பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்றும் ஓமல்பே சோபித தேரர் கேட்டுக்கொண்டார்.

“உயர் நீதிமன்றத் தீர்ப்பு வெளியாகியுள்ளது. அனைத்துக் கட்சித் தலைவர்களும் தங்கள் கட்சிகளுக்குள் இரட்டைக் குடியுரிமை வைத்திருக்கும் உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் அதை வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்,” என்றார்.

தொடர்ச்சி P2



## அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கும்

2025ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 3 சத வீதமாக உயரும் என எதிர்பார்ப்பதாகவும், அதற்கமைய அரச ஊழியர்கள் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தாதியர் சங்கத்தின் ஏற்பாட்டில், சர்வதேச தாதியர் தினம் ஞாயிற்றுக்கிழமை (12) அலரி மாளிகையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஏற்றுமதிப் பொருளாதாரத்துடன் நாட்டின் பொருளாதாரத்தை விரைவான அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்லும் பயணத்தில் நான்கு பிரதான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும் என்றும், அவற்றில் முதலாவது மத்திய வங்கிக்குச் சுதந்திரம் வழங்குவதற்கான


தொடர்ச்சி P2

ஐ.நாவில் பாலஸ்தீனத்தை உறுப்பினராக சேர்க்கும்

## தீர்மானத்துக்கு 153 நாடுகள் ஆதரவு

ஐக்கிய நாடுகள் சபையில் பாலஸ்தீனத்தை உறுப்பினராக சேர்க்கும் தீர்மானத்துக்கு ஆதரவாக 153 நாடுகள் சனிக்கிழமை (11) வாக்களித்துள்ளன.

காசாவில் நடைபெறும் போரை உடனடியாக நிறுத்த வேண்டும் என ஐ.நா. சபையில் கடந்த டிசெம்பர் மாதம் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. ஐ.நா. சபையில் மொத்தம் உள்ள 193 உறுப்பு நாடுகளில், 153 நாடுகள் இந்த தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. 10 நாடுகள் எதிராக வாக்களித்தன. 23 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்காமல் விலகியிருந்தன.



ஐ.நா. சபையில் பாலஸ்தீனம் தற்போது உறுப்பினராகச் சேர்க்கப்படவில்லை. அதற்குப் பார்வையாளர் நாடென்ற அந்தஸ்து மட்டும் வழங்கப்பட்டுள்ளது. ஐ.நா. சபையில் தங்களையும் உறுப்பினராகச் சேர்க்க வேண்டும் என பாலஸ்தீனம் நீண்ட காலமாகக் கோரிக்கை விடுத்து வருகிறது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஆங்கில வினாத்தாளை அனுப்பிய ஆசிரியர் கைது

ஆங்கில பரீட்சை காலை 8.30க்கு ஆரம்பமான நிலையில், இந்த ஆசிரியர் வட்ஸ்அப் ஊடாக காலை 9.11க்கு வினாத் தாளை அனுப்பியுள்ளார்.

க.பொ.த சாதாரண தர (சா/த) பரீட்சையின் பொது ஆங்கில வினாத்தாள் புழக்கத்தில் இருந்தமை தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் செய்த முறைப்பாட்டையடுத்து, இவர் கைது செய்யப்பட்டார்.

பிரத்தியேக வகுப்பு ஆசிரியர் வினாத்தாளைப் பகிர்ந்த குறிப்பிட்ட வட்ஸ்அப் குழுவில் 1,025 உறுப்பினர்கள் இருப்பதாகவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது நடைபெற்று வரும் க.பொ.த சாதாரண தர (சா/த) பரீட்சைக்கான ஆங்கில வினாத்தாளை பரப்பியதற்காக ஹசலக்கவைச் சேர்ந்த ஆங்கிலம் கற்பிக்கும் பிரத்தியேக ஆசிரியர் மற்றும் அவரது தாயாரின் கையடக்க தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொழும்பில் கொட்டாஞ்சேனை மற்றும் ஹசலக்க ஆகிய இரண்டு பரீட்சை நிலையங்களில் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சில பரீட்சார்த்திகள் ஸ்மார்ட்போன்களைப் பயன்படுத்தி ஆங்கில வினாத்தாளுக்கான விடைகளை அணுக முயன்றதாகவும், அவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டதாகவும் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. இந்த பரீட்சை மத்திய நிலையங்களில் இருந்த கண்காணிப்பாளர்கள் செல்போன்களை பறிமுதல் செய்தனர். எவ்வாறாயினும், பாதிக்கப்பட்ட பரீட்சை நிலையங்கள் அமைந்துள்ள பிரதேசங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்துள்ளதாக ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

# "பொது வேட்பாளர்; பயனற்ற விடயம்"

நடைமுறைச் சாத்தியமான எமது கட்சியின் வழிமுறையுடன் மக்கள் கைகோர்ப்பார்களானால் விரைவில் அனைத்து பிரச்சினைகளுக்கும் என்னால் தீர்வை பெற்றுக் கொடுக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் தென்மராட்சி பிரதேசத்தை உள்ளடக்கிய கட்சியின் பொறுப்பாளர்கள் வட்டார செயலாளர்கள் வட்டார நிர்வாக உறுப்பினர்கள் செயற்பாட்டாளர்கள், முக்கியஸ்தர்களுடனான சந்திப்பு சாவகச்சேரியில் ஞாயிற்றுக்கிழமை (12) நடைபெற்றது.

இதன்போது உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைமுறைச் சாத்தியமான வழிகள் தொடர்பில் எமது கட்சி மட்டும் தெளிவாக இருக்கின்றது. ஆனால், இவ்விடயத்தில் எமது கட்சி இருப்பதை விட மக்களும் தெளிவாக இருக்க வேண்டும்.

குறிப்பாக நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் அனுர குமார திசாநாயக்க ஆகிய மூன்று வேட்பாளர்கள் பிரதானமானவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

இந்த மூவரில் ஒருவருடன் கலந்துரையாடி எமது வாக்குகளை உங்களுக்குத் தரலாம். எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்ற பேரம் பேசலைச் செய்து கலந்துரையாடினால்தான் ஓர் ஆரோக்கியமான சூழல் உருவாகும்.

ஆனாலும், தற்போதைய நிலையில், ரணில் விக்ரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாக வருவதே சரியானதாக இருக்கும் என நான் நினைக்கின்றேன். அதனால்தான் எமது கட்சியின் ஆதரவு ரணில் விக்கமசிங்கவுக்கதான் என்பதை நாம் ஏற்கெனவே வெளிப்படையாக அறிவித்துவிட்டோம்.

அதுமட்டுமல்லாது தற்போதைய காலச் சூழலில் தென்னிலங்கையில் போட்டியிடும் ஒரு தரப்பினருடன் இணக்கத்தை ஏற்படுத்தி அவர்களுக்கு ஆதரவு வழங்கி அதனூடாக பேரம் பேசும் சக்தியாக நாம் உருவாகும் நிலையை உருவாக்குவதே அவசியமாகும்.

கடந்தகாலங்களில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தமிழ் தரப்பினர் சரியான முறையில் கையாளாத காரணத்தினால்தான் தமிழ் மக்கள் தற்போதைய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இலங்கை -இந்திய ஒப்பந்தத்தில் ஏற்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டம், மாகாணசபை முறைமையை ஆரம்பித்ததன் ஊடாகத்தான் தமிழர்களுடைய அரசியல் உரிமைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என நான் சொல்லி வருகின்றேன்.

ஆனாலும், அதனை "செவிடன் காதில் ஊதிய சங்கு" போல் யாரும் புரிந்து கொண்டிருக்கவில்லை. ஆனால், தற்போது அதுபற்றி பலரும் முணுமுணுக்கின்றார்கள். இது ஆரோக்கியமானதாக இருந்தாலும். அன்று அதை எதிர்க்கும்போதும், இன்று அதனை ஆதரிக்கும்போதும் உண்மைத் தன்மையுடன் தமிழ் தரப்பினர் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

இதேநேரம் இதய சுத்தியுடன் கூடிய உண்மைத்தன்மையாக முன்வருவார்களேயானால் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம்.

மேலும் "புண்ணுக்கு வலியா மருந்துக்கு வலியா?" என பார்த்தால் கடந்த கால தமிழ் அரசியல்வாதிகள் மருந்துக்குத்தான் வலி என்ற நிலையிலிருந்தே அரசியலை முன்னெடுத்திருந்தனர். அது என்ன நிலைமையில் மக்களைக் கொண்டு விட்டுள்ளது என்பதை இன்று உணர முடியும்.

எனவே, புண்ணுக்குத்தான் வலி என்பதையும், இதனைத் தமிழ் மக்களும் சரிவர உணர்ந்து யார் தமது பிரச்சினைகளை ஆக்கப் பூர்வமாக முன்னெடுக்கின்றார்களோ அவர்களோடு அணி திரள்வது தான் சரியானது என்றார்.

# கப்பல் சேவை ஒத்திவைப்பு

13/05/2024 முதல் 16/05/2024 பதிவு செய்த பயணிகளை 17/05/2024 சேவைக்கு மாற்றியுள்ளோம்.

பதிவு செய்த பயணிகள் 17/05/2024 அன்று அல்லது அதற்குப் பின்னர் அவர்கள் விரும்பிய திகதிகளில் பயணிக்கலாம் அல்லது செலுத்திய கட்டணத்தினை முழுமையாக மீளப்பெற விரும்பினால், customer.care@sailindsri.com என்ற மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். செலுத்திய கட்டணத்தினை பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# "என்னை நிறுத்தாவிடின் தமிழர் வரமுடியாது"

கொள்கைகளை வைத்து வேட்பாளரை நிறுத்தலாம் இது தொடர்பில் கட்சியின் மத்தியக் குழுக் கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி வவுனியாவில் இடம் பெறவுள்ளது.

இது தொடர்பில் ஆராய்ந்தும் ஆலோசனைகளைப் பெற்றும் முடிவுகளை எடுப்போம். மாவட்ட கிளை, மத்திய செயற் குழு, இது தொடர்பில் ஆராய்ந்து அந்த முடிவுகளை எடுக்கலாம். கட்சி நிலவரங்கள் மற்றும் மக்களுடைய பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலும் கட்சி தொண்டர்களுடனும் முன்னை நாள் பிரதேச சபை உறுப்பினர்களுடனும் கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளோம் என்றார்.

# கல்முனை போராட்டத்துக்கு 4,000 பேர் வலு சேர்த்தனர்

ஊர்வலமாக சுமார் 4,000 பொதுமக்கள் வந்து போராட்டத்தில் பங்கேற்றனர். இதனால் கல்முனை தமிழர் போராட்டம் மேலும் தீவிரமடைந்துள்ளது.

4,000 பொது மக்கள் பங்கேற்ற பேரணி வடக்கு பிரதேச செயலகத்தில் ஆரம்பித்துத் தரவைப் பிள்ளையார் ஆலயம் வரை சென்று மீண்டும் பிரதேச செயலகத்தை அடைந்தனர். பதாதைகளை தாங்கிய வண்ணம் மிக நீண்ட நேரம் கோஷங்களை எழுப்பி மக்கள் வலம் வந்தனர்.

தமது யதார்த்தங்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதிகள் பற்றிய கோரிக்கைகள் தாங்கிய பதாதைகளுடன் சுட்டெரிக்கும் வெயிலிலும் கொதிக்கும் தார் வீதியில் நடைபவனியாக சுமார் இரண்டு கிலோமீட்டர் தூரம் வந்து கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் முன்பாக அமர்ந்திருந்து மக்கள் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

# "இரட்டைக் குடியுரிமை...

இரட்டைக் குடியுரிமை வைத்திருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் தேர்தலுக்கு முன்னர் பதவி விலக வேண்டும்; இல்லையெனில், அந்தந்த கட்சித் தலைவர்களே பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

"இந்த எம்.பிக்களுக்கு நாட்டின் மீது எந்த விசுவாசமும் இல்லை; அவர்கள் தனிப்பட்ட இலாபத்திற்காகப் பாராளுமன்ற பதவிகளை வகிக்கின்றனர். அவர்களின் அடையாளத்தை வெளிப்படுத்தும் திறன் எங்களிடம் உள்ளது, ஆனால் வரவிருக்கும் தேர்தலுக்கு முன் அவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்," என்று அவர் கூறினார்.

"அவர்கள் முன்வரத் தவறினால், நாங்கள் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். இருப்பினும், இந்தப் பிரச்சினைகளில் வழக்குத் தொடர்வது நேரத்தைச் செலவழிக்கும் மற்றும் செயலாகும்" என்றும் சோபித தேரர் தெரிவித்தார்.

"எனவே, இரட்டை குடியுரிமை கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பதவிகளிலிருந்து மரியாதையுடன் இராஜினாமா செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கட்சித் தலைவர்கள் தங்கள் பிரதிநிதிகளைக் கவனமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்" என்றும் தேரர் கேட்டுக்கொண்டார்.

இந்த விடயங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பது அர்த்தமற்றது மற்றும் நேரத்தையும் வளங்களையும் விரயமாக்குவதாகவும் என தெரிவித்துள்ள சோபித தேரர், அவ்வாறான எம்.பிக்கள் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

# அரச ஊழியர்களின்...

மத்திய வங்கிச் சட்டம் ஏற்கெனவே நிறைவேற்றப் பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கடன் முகாமைத்துவச் சட்டம், அரச நிதிச் சட்டம் மற்றும் பொருளாதார பரிமாற்றச் சட்டம் உள்ளிட்ட சட்ட மூலங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவித்த ஜனாதிபதி, இந்த சட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சிகளினதும் ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

# "எமது தரப்பினர் விலைபோக மாட்டார்கள்"

ஆட்சியாளர்கள் நாட்டை அபிவிருத்தி செய்வதற்குப் பதிலாகப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மதுபான அனுமதிப் பத்திரங்களை வழங்கி, தேர்தல் நெருங்கி விட்டதால் பணம் கொடுத்து பாராளுமன்ற உறுப்பினர்களை தம் பக்கம் வைத்துக் கொள்ளச் செயற்பட்டு வருகின்றனர். இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் பணம் பெறும் போது மக்களுக்கு நேர்ந்தது எதுவுமில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 183ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மொனராகலை, மடுல்ல, கல்கமுவ மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு மே 12ஆம் திகதி இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஏனைய கட்சிக்காரர்கள் பணத்திற்கு விலைபோனாலும், தனது கட்சிக்காரர்கள் பணத்திற்காக விலைபோகமாட்டனர். சலுகைகள், வரப்பிரசாதங்களுக்கு அடிமைப்பட்டு, கோடிக்கணக்கான நிதியைக் கையகப்படுத்தாது ஊழல் மிக்க அரசியல் கலாசாரத்தை முறியடிக்கப் பாடுபடுவோம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

வங்குரோத்தான நாட்டில் ஐக்கிய மக்கள் சக்தி பணத்துக்காக அரசியல் செய்யும் கட்சியல்ல. சுகாதாரம் மற்றும் கல்வியை வலுப்படுத்தவே எங்களுக்குக் கிடைக்கும் நிதி பயன்படுத்தப்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# தீர்மானத்துக்கு...

இதற்கு ஐ.நா. சபையில் உறுப்பினராக உள்ள நாடுகளில் 3இல் இரு பங்கு நாடுகளின் ஆதரவும், ஐ.நா. பாதுகாப்பு பேரவையில் ஒப்புதலும் தேவை. இந்நிலையில் ஐ.நா. சபையில் உறுப்பினராகப் பாலஸ்தீனம் கடந்த ஏப்ரல் மாதம் மீண்டும் கோரிக்கை விடுத்தது. ஆனால், இஸ்ரேலின் நட்பு நாடாக இருக்கும் வீட்டோ அதிகாரம் உள்ள அமெரிக்கா இதற்குத் தடை ஏற்படுத்தியது.

இந்நிலையில் ஐ.நா. சபையில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது. அதில், "விதிமுறைகள் படி ஐ.நா. சபையில் உறுப்பினராகப் பாலஸ்தீனத்துக்குத் தகுதி உள்ளது. அதனால் பாலஸ்தீனத்தை உறுப்பினராகச் சேர்க்க அனுமதிக்க வேண்டும். இந்த கோரிக்கையை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலும் பரிசீலிக்க வேண்டும்" என கூறியிருந்தது. இதற்கு ஐ.நாவும் ஆதரவு தெரிவித்தது. ஆனால், பாலஸ்தீனம் - இஸ்ரேல் இடையே இருதரப்பு ஒப்பந்தம் ஏற்படாமல், பாலஸ்தீனத்தை அங்கீகரிக்க அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இந்நிலையில், பாலஸ்தீனத்துக்கு உறுப்பினர் அந்தஸ்து அளிக்கும் தீர்மானத்தின் மீது சனிக்கிழமை (11) வாக்கெடுப்பு நடைபெற்றது. இந்தியா உட்பட 143 நாடுகள் இந்த தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. அமெரிக்கா, இஸ்ரேல் உட்பட 9 நாடுகள் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தன. 25 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்காமல் விலகியிருந்தன. இந்த விவகாரத்தை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் சாதகமாகப் பரிசீலிக்க வேண்டும் என ஐ.நா பொதுச் சபையும் கூறியுள்ளது.

# மொட்டு அடுத்த வாரம் தீர்மானம்

இதேவேளை, எதிர்வரும் தேர்தல்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையில் வியாழக்கிழமை (9) மற்றுமொரு சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி, பாராளுமன்ற தேர்தல் தொடர்பில், இருவருக்கும் இடையே நடந்த ஆறாவது கலந்துரையாடல் இதுவாகும்.

இதில், எட்டப்பட்ட தீர்மானங்கள் மற்றும் கலந்துரையாடப்பட்ட விவகாரங்கள் தொடர்பில் தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

மேலும், ஜனாதிபதி வேட்பாளரை அறிவிப்பதில் காலதாமதம் ஆவதாக அக்கட்சியின் பல எம்.பிக்கள் கடந்த வாரம் அதன் தலைமையிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அது உண்மை என்பதை பசில் ராஜபக்ஷவும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குப்பதிவு செப்டெம்பர் 17 முதல் ஒக்டோபர் 16 வரை நடைபெறும் என தேர்தல் ஆணையம் மே 9ஆம் திகதி அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிசுவை பிரசவித்த மாணவி தப்பியோட்டம்

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவியான சிறுமி ஒருவர், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிசுவைப் பிரசவித்த பின்னர், வைத்தியசாலையில் இருந்து தப்பியோடியுள்ளார்.

வடமராட்சி துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த 15 வயதான பாடசாலை மாணவி கர்ப்பம் தரித்த நிலையில் தனது தாயுடன் குழந்தை பிரசவத்துக்காக வைத்தியசாலையில் வெள்ளிக்கிழமை(10) அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அந்நிலையில் மாணவி சிசுவை அன்றிரவு பிரசவித்துள்ளார். சிசுவை வைத்தியசாலையில் விட்டுவிட்டு, குழந்தையின் தாயான பாடசாலை மாணவியும் , மாணவியின் தாயாரும் சனிக்கிழமை (11) காலை தலைமறைவாகியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்தால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# மோசடி செய்த மொட்டு அமைப்பாளர் கைது

நிதர்ஷன் விநோத்

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி மோசடியில் ஈடுபட்ட ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் (தாமரை மொட்டு சின்னம்) அமைப்பாளர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் ஞாயிற்றுக்கிழமை (12) கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாண பிராந்திய குற்றத்தடுப்பு பொலிஸார் இவரைக் கைது செய்துள்ளனர்.

ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் மோசடியில் ஈடுபட்டதாகத் தெரிவித்து, ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தீவக அமைப்பாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடம் யாழ்ப்பாணம் பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அன்னையர் தினம் எப்படி வந்தது?

மே மாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை ‘அன்னையர் தினம்’ கொண்டாடப்படுகிறது. இதன் பின்னணியில் ஒரு தனித்துவமான வரலாறு உள்ளது.

உலகம் முழுவதும் ஞாயிற்றுக்கிழமை சர்வதேச அன்னையர் தினம் கொண்டாடப்படுகிறது. இந்த நாள் நீண்ட காலத்திற்கு முன்பே தொடங்கியது. பதினாறாம் நூற்றாண்டு பிரிட்டனில் ‘மதரிங் சண்டே’ கொண்டாடப்பட்டதாகக் கூறப்படுகிறது. நவீன அன்னையர் தினத்தின் தொடக்கம் உங்களுக்கு எப்படித் தெரியும் என்பதை பார்க்கலாம்.

பதினாறாம் நூற்றாண்டு பிரிட்டனில் ‘மதரிங் சண்டே’ என்று ஒரு சிறப்பு நாள் கொண்டாடப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த நாளில், அனைவரும் தங்கள் பகுதியில் உள்ள பிரதான தேவாலயத்திற்கு (தாய் தேவாலயம்) செல்வது வழக்கம். குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நாள் ஒன்று கூடுவார்கள் என்பது விதி.

அன்னையர் ஞாயிற்றுக்கிழமையின் அந்த சிறப்பு நாளில், குடும்பத்தின் சிறிய உறுப்பினர்களும் பிரதான தேவாலயத்தின் முற்றத்திற்குச் சென்றனர். அங்கு குழந்தைகள் தங்களுடன் பூக்கள் மற்றும் சிறிய பரிசுகளைக் கொண்டு வந்தனர். இந்த மலர்களையும், பரிசுகளையும் தாய்மார்களுக்குக் கொடுப்பது வழக்கம். அங்கிருந்து, தாய்க்கும் குழந்தைக்கும் இடையிலான பிணைப்பில் விடயம் சிக்கியது.

தாய்க்கு அன்பை வெளிப்படுத்தக் குழந்தைகளுக்கு இந்த சிறப்புப் பரிசை வழங்கும் பாரம்பரியம் நாளாக அழைக்கப்பட்டது. பின்னர், நவீன சர்வதேச அன்னையர் தினத்தின் தொடக்கம் என்று பலர் நினைக்கிறார்கள்.

ஆனால், பலருக்கு, நவீன சர்வதேச அன்னையர் தினத்தின் தொடக்கத்தில் இரண்டு அமெரிக்கப் பெண்களுக்கு ஒரு பெரிய பங்கு உள்ளது. அவர்கள் ஜூலியா வார்ட் ஹோவ் மற்றும் அன்னா ஜார்விஸ். இந்த இருவரின் நேர்மையான முயற்சியால் சர்வதேச அன்னையர் தினம் தொடங்கியது.

வரலாறு எதுவாக இருந்தாலும், அன்னையர் தினம் உலகம் முழுவதும் பல வழிகளில் கொண்டாடப்படுகிறது. அதனுடன் தொடர்புடைய பல வகையான கதைகள் உள்ளன.




# தமிழ் பேசும் மக்கள் ரணிலுக்கே ஆதரவு

## தமிழ் பொதுவேட்பாளர்களின் கோரிக்கை வெற்று கோஷம் என்கிறார் ஆனந்தகுமார்

“தமிழ் பொது வேட்பாளர் என்ற விடயமெல்லாம் வெறும் அரசியல் கோஷங்கள் மாத்திரமே, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ், முஸ்லிம் மக்கள் ஓரணியில் திரண்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு பேராதரவு வழங்க வேண்டும். அப்போதுதான் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்குரிய சூழ்நிலை உருவாகும்.” என்று ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூன்றுபேர் கொண்ட குழுவின் உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதற்கு வடக்கில் உள்ள ஓரிரு கட்சிகள் முன்னெடுத்துவரும் முயற்சி தொடர்பில் எழுதப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.


இது தொடர்பில் ஆனந்தகுமார் மேலும் கூறியதாவது,

“இலங்கையிலேயே இனவாதமற்ற, மதவாதமற்ற கட்சியென்றால் அது ஐக்கிய தேசியக் கட்சியாகும். அனைத்து இன மக்களும் ஓரணியில் திரளக்கூடிய கட்சியாகவும் அக்கட்சி திகழ்கின்றது. ஐ.தே.கவின் தற்போதைய தலைவர் ரணில் விக்ரமசிங்க, ‘ஸ்ரீலங்கா பெஸ்ட்’ என்ற கொள்கையின் அடிப்படையில் செயற்படுபவர். அவரிடம் இனவாதம், மதவாதம் கிடையாது, அனைவரும் இலங்கையர்கள், அனைவருக்கும் சம உரிமைகள் உண்டு என்ற உறுதியான நிலைப்பாட்டில் இருந்து வருகின்றார். அதனால்தான் சிறுபான்மையின மக்களின் காவலனாகக் கருதப்படும் ரணில் விக்ரமசிங்கவுக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் பேராதரவு வழங்கிவருகின்றனர். 2010இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின்போது ரணிலின் கோரிக்கையின் பிரகாரம் தமிழ் பேசும் மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கினர். அதன்பின்னர் ரணில் கூறியதால் சஜித்தையும் ஆதரித்தனர். அடுத்த தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்கும் நிலைப்பாட்டிலேயே தமிழ் பேசும் மக்கள் உள்ளனர். இதனைக் குழப்புவதற்கு சில தமிழ் அரசியல் வாதிகள் முற்படக்கூடாது.



ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஆட்சியின்கீழ் தான் தமிழ் பேசும் மக்களின் அபிவிருத்தி அரசியல் மற்றும் உரிமை அரசியல் என்பவற்றை வென்றெடுக்க முடியும். எப்போதும் உண்மையைக்கூறி அரசியல் நடத்தும் ரணில் விக்ரமசிங்க, தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நிச்சயம் தீர்வுகளை வழங்குவார். எனவே, ரணிலின் வெற்றியில் தமிழ், முஸ்லிம் மக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் பங்காளிகளாக வேண்டும். மாறாக பொது வேட்பாளர் என்ற கோஷம் ஊடாக மக்களைக் குழப்பி, சாதகமான சூழலைத் திசை திருப்ப முற்படக்கூடாது. அவ்வாறு செய்தால் அது தமிழ் மக்களின் நலனுக்கு எதிராகவே அமையக்கூடும்” என்றார் சுப்பையா ஆனந்தகுமார்.

# மரக்குற்றிகளை கடத்திச் சென்ற இருவர் தப்பியோட்டம்



எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில், சுமார் 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான மரக்குற்றிகளை கடத்திச் சென்ற இருவரை பொலிஸார் மடக்கிப் பிடிக்க முற்பட்டபோது, சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ள நிலையில், கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட டிப்பர் வாகனமும், மரக்குற்றிகளையும் ஞாயிற்றுக்கிழமை (12) பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

கனகம்புளியடி சந்திக்கு அருகில் கடமையில் ஈடுபட்டிருந்த சாவகச்சேரி பொலிஸாரால், சந்தேகத்திற்கிடமான முறையில் வீதியில் பயணித்த டிப்பர் வாகனம் ஒன்றினை வழிமறித்து சோதனை செய்தபோது, டிப்பர் வாகனத்தில் மண்ணுக்குள் புதைத்த நிலையில், பாலை மர குற்றிகளைக் கடத்திச் செலவது தெரியவந்துள்ளது.

இதன்போது, டிப்பர் சாரதி மற்றும் உதவிக்கு வந்தவருமாக இருவரும் சமரசம் பேசி ஒரு இலட்சம் ரூபாய் வரையில் கையூட்டு வழங்கத் தயார் என பொலிஸாரிடம் கூறியுள்ளனர்.

அதனை ஏற்க மறுத்த பொலிஸார், வாகனத்தை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்ல முயன்றபோது, குறித்த டிப்பர் சாரதி மற்றும் உதவியாளர் அவ்விடத்தில் இருந்து தப்பி சென்றுள்ளனர்.

பின்னர், டிப்பர் வாகனத்தை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து வந்த பொலிஸார், மண்ணை அகற்றிப் பார்த்தபோது, மண்ணுக்குள் 150 பாலை மர குற்றிகள் காணப்பட்டுள்ளன. அவற்றின் பெறுமதி சுமார் 30 இலட்சம் ரூபாய் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும், தப்பிச் சென்ற இருவரையும் கைது செய்வதற்கான நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




# போதை மாத்திரைகளுடன் நபர் ஒருவர் கைது

கனகராசா சரவணன்

ஓட்டுமாவடியில் இருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த கார் ஒன்றில் சட்டவிரோதமாகப் போதை மாத்திரைகளை கட்திச் சென்ற ஒருவரை சனிக்கிழமை (11) மாலை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பு கடற்படை புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றிக்கமைய விசேட அதிரடிப்படை குழுவினர் மற்றும் கடற்படை புலனாய்வு பிரிவினர் இணைந்து மட்டக்களப்பு ரயில்வே குறுக்கு வீதியில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே குறித்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் போது காரில் இருந்து 1,440 போதை மாத்திரைகளை மீட்டுள்ளதுடன் கடத்தலுக்குப் பயன்படுத்திய காரை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தொல்பொருட்களுடன் ஒருவர் கைது



ரஸீன் ரஸ்மின்

கற்பிட்டி - ஆலங்குடா பகுதியில் வீடொன்றிலிருந்து, சட்டவிரோதமான முறையில் வைத்திருந்த தங்கத்திலான தொல்பொருட்களுடன் சந்தேகநபர் ஒருவர் சனிக்கிழமை (11) கைது செய்யப்பட்டுள்ளார்.

கற்பிட்டி- ஏத்தாளை பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கை கடற்படைக்குச் சொந்தமான விஜய கடற்படையினரும், புத்தளம் பிரிவு குற்ற விசாரணை பிரிவின் அதிகாரிகளும் இணைந்து குறித்த பகுதியில் விசேட சோதனை நடவடிக்கையொன்றை மேற்கொண்ட நிலையில், வீடொன்றினை சோதனை செய்த போது, அந்த வீட்டிற்குள் சட்டவிரோதமாகப் பெறப்பட்டதாக சந்தேகிக்கப்படும் தொல்பொருட்கள் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

இதன்போது, தங்கத்தில் தயாரிக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் வால் ஒன்றும், ஆமை, குதிரை மற்றும் இரண்டு சிறிய சிலைகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரும், பறிமுதல் செய்யப்பட்ட தொல்பொருட்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் குற்ற விசாரணை பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளதாகக் கடற்படையினர் குறிப்பிட்டுள்ளனர்.

# துப்பாக்கி ரவைகள் மீட்பு

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள இருதயபுரம் பகுதியில் வீதியில் கைவிடப்பட்டிருந்த நிலையில், 58 துப்பாக்கி ரவைகள் சனிக்கிழமை (11) இரவு மீட்டுள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றிக்கமைய, இருதயபுரம் சமுர்த்தி வங்கி கட்டிடத்துக்கு அருகாமையில் வீதி ஓரத்தில் பையொன்றில் கட்டப்பட்ட நிலையில் கைவிடப்பட்டிருந்த 58 ரி.56 ரகத் துப்பாக்கி ரவைகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக குற்றப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.



# மாத்தளையில் தேசிய வெசாக்

ஏ.எம்.ஜலீல்

இவ்வருடம் தேசிய வெசாக் தின வைபவம் மாத்தளையை மையமாகக் கொண்டு அனுஷ்டிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

அதற்கமைய இம்மாதம் 21 முதல் 27 வரை நடைபெறவிருக்கும் இவ்வெசாக் தின வைபவத்தின் முதல் தினமன்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் கலாசார அமைச்சர் விதுர விக்ரமநாயக்க உட்பட முக்கிய அதிகாரிகள் மாத்தளைக்கு வருகை தந்து மாத்தளை விகார வீதி மற்றும் அலுவிஹார பௌத்த விகாரைகளில் சமய நிகழ்வுகளில் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இத்தினங்களில் பெரஹரா, தானசாலைகள், தோரணங்கள் மற்றும் கரோல் பவனியும் இடம்பெறவுள்ளன இதன் நிமித்தம் முக்கிய பாதைகள் திருத்தம் செய்யப்படுகின்றன.

இந்நிலையில், முஸ்லிம் கலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டில் இவ்வெசாக் தினத்தை முன்னிட்டு இவ்வெசாக் தினத்தைச்சி றப்பிக்கும் வகையிலும் இன நல்லுறவை வளர்க்கும் வகையிலும் மாத்தளையில் சில முக்கிய நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இரத்த தான நிகழ்வுடன் சிரமதானங்கள், மரநடுகைகள், தெரிவுசெய்யப்படும் வசதி குறைந்த சகல இன மாணவர் மாணவிகள் நூறுபேருக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கிவைத்தல் மற்றும் தானசாலைகளுக்குப் பங்களிப்பு வழங்குதல் ஆகிய பணிகள் குறிப்பிடத்தக்கதாகும்

இதுகுறித்த கலந்துரையாடலொன்று மாத்தளை கொங்காவல ஜும்ஆ மஸ்ஜிதில் சமீபத்தில் இடம்பெற்றது. இதன்போது, மாத்தளை மஸ்ஜிதுகள் சம்மேளணத் தலைவர் தேசபந்து எம்.முஹ்த்தார் ஜேபியுடன் மஸ்ஜிதுகளின் நிர்வாகிகள் முக்கியஸ்த்தர்கள் மற்றும் மாத்தளை மாவட்ட முஸ்லிம் கலாசார அபிவிருத்தி அதிகாரிகளான எம்.ரஹ்மதுல்லாஹ் எம்.ஜிப்ரி ஆகியோரும் கலந்துகொண்டுள்ளனர்.

# சிறுமி கூட்டு வன்புணர்வு: பெண் உட்பட நால்வர் கைது

க.அகரன்

வவுனியா நகரையண்டிய தேக்கவத்தை பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் வைத்து 15 வயது சிறுமி கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் பெண் ஒருவர் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, பண்டாரிக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசித்து வந்த 15 வயது சிறுமி ஒருவரை கடந்த ஜனவரி மாதம், வவுனியா-நகரையண்டிய பகுதி, தேக்கவத்தையில் உள்ள விடுதி ஒன்றிக்கு அழைத்துச் சென்ற இளைஞர் ஒருவர், குறித்த சிறுமிக்குப் போதை மருந்து கொடுத்துக் கூட்டு வன்புணர்வில் ஈடுபட்டதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



இம்மாதம் சிறுமியின் உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டதையடுத்து, பெற்றோர் சிறுமியிடம் விசாரித்ததில் சிறுமி கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சிறுவர் பிரிவு உத்தியோகத்தர்களை அணுகிய சிறுமியின் பெற்றோர், அவர்களின் வழிப்படுத்தலில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

முறைப்பாடு தொடர்பில் விசாரணை செய்த வவுனியா பொலிஸார், கூட்டு வன்புணர்வுக்கு உடந்தையாக செயற்பட்டதாக அவரது உறவினரான 20 வயது பெண் ஒருவரையும், வன்புணர்வில் ஈடுபட்ட சந்தேகத்தில் வவுனியா நகரப் பகுதியில் உள்ள தொலைபேசி விற்பனை நிலையத்தில் கடமையாற்றும் இளைஞன் உட்பட மூன்று இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நான்கு பேரும் வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், சிறுமியிடம் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# இரட்டைக் குடியுரிமையும் விழிபிதுங்கும் மக்கள் பிரதிநிதிகளும்

பாராளுமன்றத்தில் இரட்டைக் குடியுரிமை கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பத்துக்கும் மேற்பட்டோர் உள்ளனர் என்றும், தாங்களாகவே முன்வந்து எம்.பி பதவிகளை, அடுத்த தேர்தலுக்கு முன்னதாக இராஜினாமா செய்யவேண்டுமென மக்கள் பேரவை அமைப்பின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சரான டயனா கமகேவின் இரட்டை குடியுரிமை விவகாரம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடுத்தே, இரட்டை குடியுரிமை விவகாரம் சூடுபிடிக்கத் தொடங்கி விட்டது. உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட இந்த தீர்ப்பு வரலாற்றுத் தீர்ப்பாகும். எனினும், அரசாங்க பணிகளில் மிக முக்கிய பதவிகளில் அமர்த்தப்பட்ட அதிகாரிகள் இரட்டை குடியுரிமையைக் கொண்டிருக்கின்றனர்.

நாட்டுக்கு முதலீடுகளைக் கொண்டுவரும், வர்த்தகத்தை அபிவிருத்தி செய்யும், தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கும் மக்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவது பிரச்சினையல்ல, மாறாக மக்களின் இறையாண்மையைப் பயன்படுத்தி அதிகாரத்தை வழங்குவதே பிரச்சினையாகும்.

இலங்கையில் உள்ளவர்களுக்கு இரட்டைக் குடியுரிமை கொடுத்தாலும் பரவாயில்லை. நாட்டுக்கு முதலீடுகளைக் கொண்டு வாருங்கள், தொழில்களை மேம்படுத்துங்கள், நாட்டுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குங்கள், ஆனால் மக்களின் இறையாண்மையைப் பயன்படுத்தும் விஷயங்களை அனுமதிக்கவே கூடாது.

அனைத்துக் கட்சித் தலைவர்களும் தங்கள் கட்சிகளுக்குள் இரட்டைக் குடியுரிமை வைத்திருக்கும் உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் அதை வெளியிடவேண்டும்.

இரட்டைக் குடியுரிமை வைத்திருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் தேர்தலுக்கு முன்னர் பதவி விலக வேண்டும்; இல்லையெனில், அந்தந்த கட்சித் தலைவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

தாங்கள் அரசியலில் காலடியெடுத்து வைத்தது. மக்களுக்கு சேவையாற்றவே என்று பலரும் கூறுவதைக் கேள்விப்பட்டிருப்போம். எனினும், ஒரு சிலரைத் தவிர, பல பேர் சுகபோக வாழ்க்கையை அனுபவிக்கவே, அரசியலுக்குள் நுழைந்துவிடுகின்றனர். மக்களுடன் மிக நெருக்கமாக பணியாற்றும், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள்கூட, சுகபோகமான வாழ்க்கையையே எதிர்பார்க்கின்றனர்.

இரட்டை குடியுரிமையைக் கொண்டிருக்கும் எம்.பிக்களுக்கு நாட்டின் மீது எந்த விசுவாசமும் இல்லை; அவர்கள் தனிப்பட்ட இலாபத்திற்காகப் பாராளுமன்ற பதவிகளை வகிக்கின்றனர் என்பதும் உண்மையாகும். பொதுவாக பார்க்குமிடத்து, நீண்ட விடுமுறையை பல எம்.பிக்களும் வெளிநாடுகளிலேயே கழிக்கின்றனர். ஒரு சிலரின் பிள்ளைகள் வெளிநாடுகளிலேயே உயர்கல்வியைக் கற்கின்றனர்.

எனவே, இரட்டை குடியுரிமை கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பதவிகளிலிருந்து மரியாதையுடன் இராஜினாமா செய்ய வேண்டும் கட்சித் தலைவர்கள் தங்கள் பிரதிநிதிகளைக் கவனமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் இல்லையேல், பொதுமக்களின் வரிப்பணம் மட்டுமே வீணாக்கப்படும். சேவை எனும் முகமூடியை அணிந்துகொண்டு அரசியலுக்கு நுழைவோர், சுகபோகங்களை அனுபவித்துக்கொண்டு, சுரட்டி விட்டு விடுவர் என்பதே உண்மையாகும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# தமிழ்த் தேசியத்தில் முள்ளிவாய்க்கால் 15

**லக்ஷ்மன்**

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்குத் தயாராகுங்கள், இனப்படுகொலைக்குச் சர்வதேச குற்றவியல் விசாரணையை வலியுறுத்துவோம், 13ஐ நிராகரிப்போம், ஒற்றையாட்சியை நிராகரிப்போம், தமிழ்த் தேசமும் அதன் இறைமையும் அங்கீகரிக்கப்பட்ட தீர்வை வலியுறுத்தி முள்ளிவாய்காலுக்கு பல்லாயிரமாய் அணிதிரள்வோம் போன்ற கோசங்களை அரசியல்வாதியொருவர்.

சில நாட்களுக்கு முன்னர் மக்களுக்கான அழைப்பாக விடுத்திருந்தார்.

உலக வரலாற்று அரசியலில் தேசிய விடுதலைப் போராட்டங்கள், தேசிய அரசுகளின் தோற்றங்கள், போராட்டங்களின் தோல்விகள், அழிவுகள், இழப்புக்கள் ஒன்றும் புதிதல்ல. ஈழத்துக்கான போராட்டம் தானாகவே முகிழ்த்ததுமல்ல.

இலங்கை பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் வழங்கப்பட்டதுமுதல் பெரும்பான்மையினருடைய பாகுபாடு, விட்டுக்கொடுக்காமை, நடுநிலைத்தன்மையின்மை, அடக்குமுறை, பாரபட்சம், குடியேற்றம் என பல்வேறு காரணங்களால் உருவானதே.

வடக்கு கிழக்குத் தமிழர்களின் பூர்வீக தாயகப் பிரதேசத்தில் நடைபெற்ற இவ்வாறான அத்துமீறல்களுக்கு எதிராக ஆயுத இயக்கங்கள் உருவாவதற்கு முன்னர் நடைபெற்ற அஹிம்சை ரீதியான போராட்டங்களில் தோல்வியே ஆயுத இயக்கங்களின் உருவாக்கத்துக்குக் காரணமாக இருந்தன.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்காக போராடப் புறப்பட்ட இயக்கங்களின் இலக்கு ஒன்றாக இருந்த போதிலும், சித்தாந்தங்கள், கொள்கைகள், அணுகுமுறைகள் காரணமாக இலக்கை மறந்தவர்களாகவும், சந்தேகங்கள், மற்றும் தவறான எண்ணங்களால் முரண்பட்டு ஒரு எல்லைக்கப்பால் மோதலை நடத்தினர். அது இயக்க மோதலென்றானது. பல இழப்புகள் ஏற்பட்டன.

காலப்போக்கில் ஆயுதப் போராட்டம் மட்டுமே அரசியல் விடுதலைக்கான வழி என்ற நிலை மாறி அரசியல் ரீதியான செயற்பாடும் விடுதலைக்குத் தேவை என உணரப்பட்டதன் பலனாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கூட்டு விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்டது.

அந்தக் கூட்டு அரசியல் ரீதியாகவும், விடுதலைப்புலிகள் ஆயுத ரீதியாகவும் தமிழ் மக்களது அரசியல் அபிலாசை நிறைவேற்றத்துக்கான ஏக பிரதிநிதிகளாக பிம்பப்படுத்தப்பட்டிருந்தனர்.

ஆனால், 2009 மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் யுத்தம் மௌனிக்கச் செய்யப்பட்டதுடன், அந்த பிம்பம் காணாமலாக்கப்பட்டதாகவே கொள்ளப்பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவான காலம் முதல் தமிழ் மக்களிடையேயும் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுக்கிடையேயும் ஐக்கியமும் ஒற்றுமையும் புரிந்துணர்வும் இருந்தே வந்துள்ளது. இதற்குத் தமிழ்த் தேசியத்தின் பாற்கொண்ட பற்றினை விடப் பயமே காரணம் என கடந்த காலங்களிலும் தற்போதும் கருத்து நிலைப்பாடு இருந்து கொண்டே இருக்கிறது. இதனை மறுப்பதற்கில்லை என்பதற்கப்பால் தமிழரசுக் கட்சியின் தனி நிலைப்பாடுகளுக்கும் இதுவே காரணம் என்பதும் நிரூபிக்கப்பட்டும் விட்டது.

இப்போது, முள்ளிவாய்க்கால் முடிவு தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷையை புதைத்து விட்டதாகவே கொள்ளவேண்டிய நிலைமை உருவாகிவருகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் 2009 மே 18க்குப் பின்னர் தங்களது கருத்தொருமிப்பிலிருந்து விலகத் தொடங்கின. அந்தவகையில்தான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சியின் மேலாதிக்கம் தமிழ்த் தேசியம் சிதைவடைய வழிவகுத்தது என்ற கருத்து வலுவடையத் தொடங்கியது.

இதனை நாம் கூட்டமைப்பின் உருவாக்கத்துடன் நடைபெற்ற தேர்தலில் பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கை மற்றும் தொடங்கிக் கடந்த தேர்தலில் பெற்றுக் கொண்ட ஆசனங்கள் வரை கவனித்தால் புரிந்து கொள்ளமுடியும்.

ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகை நலிவடைந்ததுடன், கட்சிகளில் விலகல், அல்லது புதிய தமிழ்க் கட்சிகளின் உருவாக்கமென்று சிதறிப்போன தமிழ்த் தேசிய அரசியலையே நாம் இப்போது அடைந்திருக்கிறோம்.

இதற்கும் முள்ளிவாய்க்கால் காரணம் என்று சொல்ல முடியும். ஏனெனில், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முடிவேயாகும்.

இப்போதும் மக்களின் உணர்வு சார்ந்த விடயமாக இருந்து வருகின்ற முள்ளிவாய்க்கால் அவலமானது சரியான வகையில் அரசியல் கட்சிகளாலும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளாலும் கையாளப்படுகிறதா? அல்லது எதிர்கால சந்ததியினருக்கு இதன் தாற்பரியம், தமிழ் மக்களுடைய அரசியல், உரிமைக்கான சுய நிர்ணயப் போராட்டம் குறித்த விளக்கங்கள் கடத்தப்படுகின்றனவா? என்ற கேள்வி இருந்து கொண்டேயிருக்கிறது.

அரசாங்கம் சட்டத்தைப் பயன்படுத்தி அடக்கி விடலாம் என்று எண்ணுவதும் எதிர்த்தரப்பு அரசியல்வாதிகள் மக்களை ஏமாற்றிவிட எண்ணுவதும் இதனாலேயே நடைபெற்று வருகின்றன என்பதே உண்மை.

கார்த்திகை 27, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், கடந்த காலங்களில் நடைபெற்ற படுகொலைகளின் நினைவேந்தல்கள் கடந்த வருடங்களில் தடைகளுக்கு உட்பட்டிருக்கின்றன. சில வேளைகளில், சுமுகமாக நடைபெற்றிருக்கின்றன. இருந்தாலும் இவ்வருடத்தில் அவ்வாறான அடக்குதல்கள் இல்லாமல் முள்ளிவாய்க்கால் நினைவுகள் நடைபெறக்கூடும் என்று நம்பக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன.

மக்களின் உணர்வு சார்ந்த விடயத்தைச் சட்டத்தைக் கொண்டு அடக்கி விடலாம் என்ற எண்ணம் தோன்றுவதற்கு அரசியல்வாதிகள் சிலர், இவ்வாறான விடயங்களை அரசியலாக்க முனைவதே காரணமாகச் சொல்லப்படுகிறது.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் பெற்றோர்கள், குடும்ப உறவுகள், போராளிகள் என இலட்சக் கணக்கானவர்கள் உயிர்களைத் தியாகம் செய்திருக்கிறார்கள். அவர்களின் நினைவு என்பது எமது உள்ளத்தில் எப்போதும் இருக்கின்ற விடயம்.

இதனைப் பொதுவெளியில், உலகறியத்தான் அனுஷ்டிக்க வேண்டும் என்றில்லை. அவர்களின் தியாகங்களை எண்ணி எமது உள்ளத்திலிருந்து எழும் கண்ணீர் கூட அவர்களுக்கான அஞ்சலிதான். இதனை யாரும், எந்த அரசாங்கமும் தடுக்க முடியாது என்கிற நிலைப்பாடும் ஒருசில அரசியல் தரப்பினரிடம் இருக்கிறது.

ஆனாலும், அரசியல் உணர்வெழுச்சிக்கான செயற்பாடு தேவையானது என்பது பொது நிலைப்பாடாக இருக்கிறது.

யுத்தம், யுத்த காலம், யுத்த இழப்புகள், யுத்தக் கொடுமைகள், இன்னல்கள் என்ற வரிசையுடன் 40 வருட காலங்கள் கடந்து போயின. இப்போது யுத்தம் மௌனிக்கப்பட்டு 15 வருடங்கள் கடந்து கொண்டிருக்கிறது. ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அவை அறிக்கைகளை வழங்கியிருக்கின்றன. சிலவற்றில் சில விடயங்கள் ஓரளவுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன. பல காணாமலேயே போயிருக்கின்றன.

இலங்கையில் ஒவ்வொன்றுக்கும் ஆணைக்குழுவையே நியமிக்கும் வழக்கம் ஒரு வரலாறாகவே இருந்து வந்திருக்கிறது. அது போன்று ஒரு அரசாங்கம் புதிதாக ஆட்சிக்கு வந்தால் ஏற்கெனவே ஆட்சியிலிருந்த அரசாங்கத்தின் அனைத்துச் செயற்பாடுகளையும் கைவிட்டு புதிதாக ஒரு செயற்பாட்டைத் தொடங்குவதும் வரலாறுதான். ஆனால், இதுவரையில் தமிழ் மக்களின் மனங்களுக்கு ஆறுதல் கொடுக்கும் வகையில் எந்தத் தீர்வும் கிடைத்து விடவில்லை.

இதற்கிடையில் தமிழர் தரப்பினர் இன அழிப்பு, மனித உரிமை மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டம் மீறப்பட்டமை தொடர்பில் சர்வதேசத்தினால் நீதி வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையுடன், ஐக்கிய நாடுகள் சபையிடம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். அவையும் இன்னமும் முடிவுகளைக் கொடுக்கவில்லை.

எவ்வாறானாலும், இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொட்டு, இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்பது குறித்த சிந்தனைகள் தோற்றம் பெற்றாலும், இன்னமும் எதனையும் அடைந்துவிட முடியாமைக்கு என்ன காரணம் என்று கண்டுபிடிக்க முடியாதளவில்தான் இலங்கையின் நிலைமை காணப்படுகிறது.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதாக அமையவில்லை. யுத்தத்தின்போது, மனித உரிமைச் சட்டம், சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்படுவது வழமையாக இருந்தாலும் அதனை ஏற்றுக்கொள்வதற்கான மனோபக்குவம் அரசாங்கத்திடம் இருக்கும்போதுதான் அங்கு நல்லிணக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும் என்பது யதார்த்தமாகும். ஆனால், அதனைக் காணவேயில்லை என்பது மக்களின் கருத்தாகும்.

கலாநிதி ஜெஹான் பெரேரா, 'இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண 1956இல் இருந்து ஆட்சியிலிருந்த அரச தலைவர்கள் முயற்சித்தார்கள். என்றாலும், அந்த முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை. இருப்பினும் பெரும்பான்மை மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொண்டுள்ள அரசாங்கத்தினால் அதனைச் செய்யமுடியும். இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் நாடு ஒருபோதும் முன்செல்ல முடியாது என 2009களின் இறுதிக்காலங்களில் தெரிவித்திருந்தார்.

அது மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலகட்டமாகும்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வும் இன நல்லிணக்கமும் ஒன்றுடன் ஒன்று இணைந்ததாகவே காணப்படுகிறது.

யுத்தத்தின்போதும் யுத்தத்துக்குப் பின்னரும் தமிழ் மக்கள் எதிர்கொண்டுவரும் இன்னல்களுக்கு முடிவு கட்டுவதாகத் தமிழ்த் தேசிய அரசியல் செய்யப்படவில்லை என்பதே குற்றச்சாட்டு. இனியேனும், வெறுமனே மக்களை உசுப்பேற்றாத அரசியலைத் தெளிவான தமிழ்த் தேசியச் சிந்தனையுடன் முன்னெடுப்பதே முள்ளிவாய்க்கால் அழிப்புக்குத் தமிழ்த் தேசிய அரசியல் தரப்பினர் கொடுக்கும் பிரதிபலனாகும். இல்லையானால் பயனேதுமில்லாமலேயே காலங்கடத்த வேண்டியிருக்கும்.



## வாழ்வியல் தரிசனம்

மக்களுக்கான சேவைகளைச் செய்யும் போது இனம் புரியாத களிப்பு நெஞ்சத்தில் உள்நுழையும். எங்களால் ஒருவரோ அல்லது பலராக இருந்தால், அது உங்களுக்கு இறைவன் தந்த வரம் என உணர்க!

மேலும் உங்களது நேரத்தை, பிறருக்காகச் செலவிடுவது கூட ஒரு தியாகம். தனக்கான வேலைகளை ஒத்தி வைத்து பிறருக்காக நல்லது நடக்க உதவுதலே சமூகப் பண்புமாகும்.

தெருவில் நீங்கள் நடக்கும் போது ஒருவர் வந்து, தான் செல்லும் பாதை எதுவெனக் கேட்டாலே பராமுகத்துடன் செல்பவர்களைக் கண்டிருப்பீர்கள்.

ஒரு சிறிய உதவிகளை யாராவது மறுக்கும்போது அது கேட்டவர் மனம் பாதிக்கப்படும் என அறிந்துகொள்ள வேண்டும்.

'உலகைச் சுற்றி நோக்குக! எத்தனை, எத்தனை அருளாளர்கள் தியாகம் செய்து வளர்த்த பூமி இது.

பெறுவது மட்டும் எங்கள் குணமாக இருக்கலாகாது. வழங்கும் இயல்பும் அவசியமானது. இந்தப் பூமி எமதே, யாவருக்கும் உதவுக.

– பருத்தியூர் பால– வைரவநாதன்

## கடிதங்கள்

### காணி உறுதிப் பத்திரம் வழங்கப்படவில்லை

ஹட்டன்- நோட்டன் பகுதியிலுள்ள 400 குடும்பங்களுக்குக் காணி உறுதிப் பத்திரம் வழங்கப்படவில்லையெனவும் இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நோட்டன் நகரில் விமலசுரேந்திர மின் நிலையம் மற்றும் நீர்த் தேக்கம் 1947ஆம் ஆண்டில் இலங்கை மின்சார சபை தற்காலிகமாக பொறுப்பேற்ற நிலையில், அப் பகுதியிலுள்ள பாரிய நிலப் பரப்பை மீண்டும் கையளிக்காத நிலையில், அப் பகுதியில் அபிவிருத்தி திட்டங்கள் மேற் கொள்ள முடியாததுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

மேலும், நோட்டன் நகரில் உற்பத்தி செய்யும் பலருக்கு மின்சாரம் வசதி கிட்டவில்லையெனவும் அப் பிரதேச மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நகரத்தில் வாழும் மக்கள் தங்கள் குடியிருக்கும் காணிகளை தங்களுக்குச் சொந்தமாக ஒப்பனையுடன் வழங்க வேண்டும் என அம்பகமுவ செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும், இதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் மக்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

– செ.தி.பெருமாள்



# இயற்கையை சீண்டியது போதும்





ச.சேகர்

காலம் மாறிவிட்டது. காலநிலையும் மாறவிட்டது. தொழில்நுட்ப வளர்ச்சியுடன், வேகமாக இயங்கும் உலகில், மனிதனின் தேவைகளும், நுகர்வு முறைகளும் மாறுபட்டுள்ளது. இதனால் சூழலுடன் ஒன்றித்து வாழும் வாழக்கை முறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக சூழலை மாசுபடுத்துவதில் ஆரம்பித்து, இயற்கையைச் சீண்டுமளவுக்கு மனிதச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

இவை தொடர்பில் பல்வேறு அறிவுறுத்தல்கள் வெளியாகியும், அவை தொடர்பில் மக்கள் மத்தியில் போதியளவு விழிப்புணர்வு இல்லையா அல்லது அவை தொடர்பில் அக்கறை இல்லையா என்பதைப் பற்றியே கேட்கத் தோன்றுகின்றது.

ஆம், அண்மைக் காலமாக உலகின் வெவ்வேறு பகுதிகளில் நடந்தேறும் இயற்கை அழிவுச் சம்பவங்களை எடுத்துப் பார்த்தால், மனிதன் இயற்கையை எந்தளவுக்குச் சீண்டியுள்ளான் என்பது தெளிவாகின்றது.

சில உதாரணங்களாக டுபாயில் கடந்த மாதம் ஏற்பட்ட கடும் மழை, 1940 ஆம் ஆண்டு காலப்பகுதி முதல் அந்நாட்டில் மழைவீழ்ச்சி பதிவு செய்வது ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து பதிவாகியிருந்த மிகவும் அதிகூடிய மழைவீழ்ச்சி 24 மணி நேரத்தினுள் பெய்திருந்தது. விமான நிலையம் உட்பட, நாட்டின் பிரதான வீதிகள், குடியிருப்புகள் அனைத்துமே வெள்ளத்தில் மூழ்கின. அந்நாட்டில் வடிகான் அமைப்பு முறையாக இன்மை இதற்கு ஒரு காரணமாக அமைந்திருந்தாலும், ஒரு வருடத்தில் பெறப்பட வேண்டிய மழைவீழ்ச்சி, ஒரே நாளில் பெய்து தீர்த்தமை உலக நாடுகளையே திரும்பிப் பார்க்க வைத்தது.

அதனைத் தொடர்ந்து, பிரேசிலின் தென்பகுதியில் தொடர்ச்சியாக ஒரு வார காலப்பகுதிக்கு மேலாகப் பெய்த அடைமழை காரணமாக அங்கும் பெருமளவு உயிர்ச் சேதம், பொருட் சேதம் ஏற்பட்டிருந்தன.

இவ்வாறு ஒரு பகுதியை அடை மழை வாட்டி எடுக்க, மறுபுறம், ஆசியப் பிராந்திய நாடுகளில் கடும் வெயில் வறுத்தெடுத்து வருகிறது. இலங்கை உட்பட, வியட்நாம், தாய்லாந்து அடங்கலாக இந்த வெயிலின் கடும் வெப்பத் தாக்கத்தை உணர முடிந்தது. வெப்பநிலை மனித உடலுக்குத் தாங்கிக் கொள்ள முடியாதளவு 45 பாகை செல்சியசுக்கு அப்பால் பதிவாகியிருந்தது.

இலங்கையிலும், வட பிராந்தியத்தில் அகோர வெயில் வெப்பம் வாட்டி வதைக்கும் நிலையில், தென்பகுதியில் காலி முதல் அம்பலங்கொட வரையான கரையோரப் பகுதியில் கடல்நீர் நிலத்தினுள் ஊடுருவும் சம்பவங்களும் பதிவாகியிருந்தன. வருடாந்தம் இந்த காலப்பகுதியில் இவ்வாறான சம்பவங்கள் பதிவாகின்றமை வழமையாக இருந்தாலும், இம்முறை அதன் தாக்கம் அதிகரித்திருந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்திருந்தனர். இவ்வாறு வெப்பத்தின் தாக்கம் வரலாறு காணாத வகையில் உச்சம் தொட்டுள்ள நிலையில், அடுத்து வரும் மாதங்களில் மழை வீழ்ச்சியும், அதனால் ஏற்படும் வெள்ளப் பெருக்கின் தாக்கமும், சேதங்களும் அதிகமாக இருக்கும். மலைநாட்டுப் பகுதியில் மண்சரிவுகள் தவிர்க்க முடியாத சம்பவங்களாக இருக்கும்.

இவ்வாறு தொடர்ந்து அசாதாரணமான முறையில் காலநிலையில் ஏற்படும் மாற்றம் காரணமாக, நீண்ட கால அடிப்படையில் பாதிப்புகள் ஏற்படுகின்றன. ஏன் இவ்வாறான அசாதாரண மாற்றம் ஏற்படுகின்றது? எல்-நினோ, லா-நினோ என பல காரணங்கள் தெரிவிக்கப்பட்டாலும், அவை ஏற்படவும் மனிதனின், இயற்கையைச் சீண்டும் செயற்பாடுகளே காரணமாகின்றன.

நிலக்கரி எரிப்பில் ஆரம்பித்து, காடழிப்பதுடன், நீரோடைகளை மறித்து, அவற்றை நிரப்பி கட்டிடங்களை அமைப்பது முதல், பிளாஸ்ரிக் கழிவுகளை உருவாக்குதல் வரை என பல விடயங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். புவி வெப்பம் அதிகரிப்பதன் காரணமாக இந்த மாற்றம் ஏற்படுகின்றது. புவியின் துருவங்களில் காணப்படும் பனிப்பாறைகள் உருகி, அவை கடல் நீருடன் கலந்து, கடல் நீர்மட்டம் அதிகரிப்பதும், புவி வெப்பச் சமநிலையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

அதிகாரத்திலுள்ளவர்களும், தமது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து, இவ்வாறான இயற்கையுடன் சீண்டும் செயற்பாடுகளில் ஈடுபடுவதைக் காண முடிகின்றது. அண்மைக்காலத்தில் அவ்வாறு நடந்தேறிய ஒரு சம்பவத்துக்கான உதாரணமாக, மரம் வெட்டுதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து சூழல் சார் செயற்பாட்டு அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்ட போது, அமைச்சருக்கு நெருக்கமான நபர் ஒருவர் “ஒட்சிசனை உண்ண முடியுமா?” என கேள்வி கேட்டிருந்தார். இது சமூக வலைத்தளங்களில் பரவி, பலர் மத்தியில் பரவலாகப் பேசப்பட்டது. இவ்வாறு உயர் மட்டத்திலிருக்கும் அதிகாரிகள் முதல் இந்த சூழல் மாசு, இயற்கையுடன் சீண்டுதல் போன்ற விடயங்கள் பற்றி போதிய அறிவின்மை தெளிவாகின்றது.

சுற்றாடல் அமைச்சர் என ஒருவர் காணப்பட்டாலும், அந்த அமைச்சினால் சூழலைப் பாதுகாக்க எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது கேள்விக்குறியாக அமைந்துள்ளது. வெறுமனே இங்குக் குப்பை கொட்டினால் அபராதம், இது வனாந்தரப் பகுதி, உட்பிரவேசிக்கக் கூடாது, எதிர்கால சந்ததிகளுக்காக இந்த வளங்களைப் பாதுகாக்க வேண்டும் என ஆங்காங்கே அறிவுறுத்தல் பதாதைகள் மாத்திரம் நிறுவுவது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த போதுமானதாக இல்லை.

ஒவ்வொரு தடவையும் வெள்ள அனர்த்தம் ஏற்படும் போது, மனித உடலினால் தாங்கிக் கொள்ள முடியாத வெப்பநிலை நிலவும் போது, உயர்ந்த பகுதிக்குச் செல்வது, தற்காலிகமாகத் தஞ்சமடைவது, வாயு குளிரூட்டிகளை பயன்படுத்துவது, நகரங்களை அண்மித்து வசிப்பவர்களாயின் அருகாமையிலுள்ள வாயு குளிரூட்டப்பட்ட அங்காடிக்கு அல்லது பல்பொருள் விற்பனை நிலையத்துக்குச் சென்று குளிர் காற்று வாங்குவது போன்ற பாதிப்புகளிலிருந்து தம்மை உடனடியாக பாதுகாத்துக் கொள்ளும் விடயங்களில் கவனம் செலுத்துகின்றனரே தவிர, இவ்வாறான மாற்றம் ஏற்படக் காரணம் என்ன என்பதை உணர்ந்து செயலாற்ற மறுக்கின்றனர்.

மறுபக்கத்தில் வியாபார நிறுவனங்கள். இலாப மீட்டும் நோக்கில் இயங்குகின்றனவே தவிர, பெயருக்காகத் தாம் சூழலில் அக்கறை காண்பிக்கின்றோம், சமூகப் பொறுப்புணர்வு செயற்பாடுகள் என தெரிவித்துச் செயற்பட்டாலும், உண்மையில் உற்பத்திச் செயற்பாடுகளில் ஈடுபடும் நிறுவனங்களினால் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாமல் இல்லை என்பதே உண்மை. இதை எந்த பல்தேசிய நிறுவனமும் பகிரங்கமாக மறுத்ததாக இல்லை. அவ்வாறு வியாபார செயற்பாடுகளில் ஈடுபடும் நிறுவனங்களினால் ஏற்படும் சூழல் பாதிப்பைக் கண்காணிப்பதற்கு விதிமுறைகள் உறுதியானதாக இல்லை. குறிப்பாக இவ்வாறான நிறுவனங்களிலிருந்து வெளியேறும் கழிவுகள், வெப்ப வெளியேற்றம், அபிவிருத்தி எனும் பெயரில் முன்னெடுக்கப்படும் விஸ்தரிப்புகள் போன்றன நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ காலநிலை தாக்கத்துக்குக் காரணமாக அமைந்துவிடுகின்றன.

நெருப்பைத் தீண்டினால் சுடும் என்பது தெரியும். அதனால் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு எச்சரிக்கையாக இருக்கின்றனர். அதுபோலத்தான் இயற்கையும், நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயற்பாடும், சூழலில் தாக்கம் செலுத்தி, இயற்கையின் சீற்றத்துக்கு வித்திடுகின்றது. தொழில்நுட்ப விருத்தி எனும் பெயரில், மனிதன் ஏற்படுத்தியுள்ள அபிவிருத்தி, இயற்கையுடன் ஒன்றித்துப் போவதாகத் தெரியவில்லை. இதில் துரிதமாக மாற்றம் ஏற்படாவிடின், எதிர்வரும் காலங்களில் இதை விட மோசமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்.

### உலக கடல்புல் தினம் 2024 மற்றும் ஐ.நா. சீராக்க விருதுகள்

# தேசிய நிகழ்வுடன் SLT-MOBITEL கைகோர்ப்பு

சுற்றாடல் அமைச்சினால் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உலக கடல்புல் தினம் 2024 மற்றும் ஐ.நா. சீராக்க விருதுகள் தேசிய நிகழ்வில் SLT-MOBITEL கைகோர்த்திருந்தது. இந்நிகழ்வு நீர் கொழும்பு ஜெட்விங் ப்ளூ ஹோட்டலில் நடைபெற்றது. கண்டல் தாவரங்களின் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கை எய்தியுள்ள சாதனைகளை கௌரவிக்கும் வகையிலும், இந்த நீல-காபன் சூழல் கட்டமைப்புகளை பாதுகாப்பதில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையிலும் இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுக்கு ஆதரவளித்திருந்ததூடாக, இலங்கையில் சூழலுக்கு நட்பான கூட்டாண்மை கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்களினூடாக சூழல் பாதுகாப்பை ஊக்குவிப்பதில் கூட்டாண்மை முன்னோடி எனும் தனது நிலையை SLT-MOBITEL மீள உறுதி செய்திருந்தது.

2024 பெப்ரவரி 27ஆம் திகதி கென்யாவின் நைரோபி நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சூழல் ஒன்றுகூடல் நிகழ்வில், ஐ.நா. சீராக்க விருதை இலங்கை பெற்றுக் கொண்டது. சுற்றாடல் அமைச்சின் முன்னாள் செயலாளர் கலாநிதி. அனில் ஜாசிங்க மற்றும் கண்டல் தாவர பாதுகாப்பு மற்றும் நிலைபேறான பாவனைக்கான தேசிய நிபுணர் குழுவின் தலைமை அதிகாரி பேராசிரியர். செவ்வந்தி ஜயகொடி ஆகியோர், இலங்கையின் சார்பாக இந்த விருதைப் பெற்றுக் கொண்டனர். உலக கடல்புல் தின நிகழ்வின் போது சுற்றாடல் அமைச்சின் செயலாளரிடம் இந்த விருதை பேராசிரியர். ஜயகொடி வைபவ ரீதியாக கையளித்திருந்தார்.






இலங்கையின் கண்டல் தாவர சூழல் கட்டமைப்பை மறுசீரமைப்பது தொடர்பில் இலங்கையின் புத்தாக்கமான செயற்பாடுகளை கௌரவிக்கும் வகையில் இந்த விருது அமைந்துள்ளது.

இந்த நிகழ்வின் போது, SLT-MOBITEL இன் 2024ஆம் ஆண்டுக்கான ‘இலங்கையின் கண்டல்தாவர சூழல்கட்டமைப்புகள்’ எனும் தொனிப்பொருளில் அமைந்த நாட்காட்டி வெளியிடப்பட்டிருந்தது. 12 கண்கவர் ஆக்கங்களைக் கொண்டதாக, இலங்கையின் கண்டல் தாவர சூழல் கட்டமைப்பை பிரதிபலிக்கும் வகையில் இவை அமைந்திருந்தன. இந்நிகழ்வில் ஒன்றுகூடியிருந்தவர்கள் மத்தியில் SLT இன் சந்தைப்படுத்தல் சேவைகள் பொது முகாமையாளர் அனுருத்த சூரியாரச்சி உரையாற்றியிருந்தார்.

முக்கியமாக, SLT-MOBITEL இணையத்தளத்தினூடாக நாட்டின் எந்தப் பாகத்தையும் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் இந்த புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்க முடியும். முறையான மதிப்பாய்வு செயன்முறையினூடாக, இந்த புலமைப்பரிசிலைப் பெறுவோர் தெரிவு செய்யப்படுவர். இலங்கையின் நீல-காபன் சூழல் கட்டமைப்பின் நிலைபேறாண்மைக்கு ஆதரவளிக்கும் வகையில் இந்த புலமைப்பரிசில்கள் அமைந்துள்ளன. சூழல் நிலைபேறாண்மை தொடர்பான கல்வி மற்றும் ஆய்வுச் செயற்பாடுகளில் நிறுவனம் கொண்டுள்ள ஈடுபாட்டுடன் பொருந்தும் வகையிலும் இது அமைந்துள்ளது.

# ஜப்பானும் ஐ.நா. பெண்கள் அமைப்பும் இணைவு



இலங்கையில் சமாதானத்தை கட்டியெழுப்புதல் மற்றும் மோதல்களைத் தடுப்பதில் பெண்களின் பொருளாதார வலுவூட்டல் மற்றும் அவர்களின் தலைமைத்துவத்தை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு ஜப்பான் அரசாங்கமும் ஐ.நா. பெண்கள் அமைப்பும் "சமாதானத்திற்கான பாதைகள்" என்ற செயற்திட்டத்தை ஆரம்பித்தன. 2018ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கு தனது பங்காளர் நாடாக ஜப்பான் அரசாங்கம் உதவி செய்து வரும் பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு (WPS) தொடர்பான தேசிய செயற்திட்டத்தை (NAP) அமுல்படுத்துவதற்கு ஆதரவளிப்பதே இந்த செயற்திட்டத்தின் நோக்காகும்.

பெப்ரவரி 2023இல், ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 1325 (2000) இன் கீழான அதனது சர்வதேச கடப்பாடுகளுக்கு இணங்க, இலங்கை WPS தொடர்பானதனது முதலாவது NAPஐ ஏற்றுக்கொண்டது. இந்த திட்டத்தின் விருத்தியானது ஐ.நா. பெண்கள் அமைப்பின் தொழில்நுட்ப ஆதரவுடனும் ஜப்பான் அரசாங்கத்தின் நிதியுதவியுடனும் இலங்கையின் பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டது.

திட்டத்தை வெற்றிகரமாக ஏற்றுக்கொண்டதன் மூலம், அதன் முன்னுரிமைப் பகுதிகளை

> **சமாதானத்தைக் கட்டியெழுப்பும் 500 பெண்களுக்கு இயலளவை கட்டியெழுப்பும் ஆதரவை வழங்குதல், பால்நிலை சமத்துவம் மற்றும் சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்காக சமூக மற்றும் வீட்டு மட்டத்தில் சமூக நெறிமுறைகள் மற்றும் நடத்தை மாற்ற நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றுடன் அவர்களுக்கு முரண்பாட்டுத் தீர்வு, மத்தியஸ்தம் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்ப வழிநடத்துவதற்கு அவர்களை சாதகமாக்கல் ஆகியவை உள்ளடங்கும்**

செயற்படுத்துவதன் மூலம் சமாதானத்திற்கான வலுவான பாதைகளை உருவாக்குவதை இந்த செயற்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதில், சமாதானத்தைக் கட்டியெழுப்பும் 500 பெண்களுக்கு இயலளவை கட்டியெழுப்பும் ஆதரவை வழங்குதல், பால்நிலை சமத்துவம் மற்றும் சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்காக சமூக மற்றும் வீட்டு மட்டத்தில் சமூக நெறிமுறைகள் மற்றும் நடத்தை மாற்ற நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றுடன் அவர்களுக்கு முரண்பாட்டுத் தீர்வு, மத்தியஸ்தம் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்ப வழிநடத்துவதற்கு அவர்களை சாதகமாக்கல் ஆகியவை உள்ளடங்கும்.

இந்த செயற்திட்டம், முன்னாள் மோதல்கள் பாதித்த பகுதிகளில் உள்ள 500 பெண்கள் தலைமையிலான நுண் கைத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதோடு, நாட்டின் சமூக-பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் இயலாமையுடைய பெண்கள் உட்பட பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு ஆதரவை வழங்கும்.

“இலங்கையில் பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதில் ஐ.நா. பெண்கள் அமைப்பின் நீண்டகால பங்காளராக ஜப்பான் இருந்து வருகிறது. எமது நிகழ்ச்சித் திட்டங்கள் பெண்களின் வாழ்வில் அர்த்தமுள்ள மாற்றத்திற்கு வழிவகுத்துள்ளதுடன், இலங்கைப் பெண்களை மாற்றத்தின் தலைவர்களாக ஆக்குவதற்கு இந்த கூட்டுறவைத் தொடர நாங்கள் எதிர்பார்க்கின்றோம்” என ஐ.நா பெண்கள் அமைப்பின் இலங்கையின் அலுவலகத் தலைவரான ராமாயா சல்காடோ தெரிவித்தார்.

இந்த செயற்திட்டமானது அனுராதபுரம், மட்டக்களப்பு, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஆப்கானிஸ்தான்

### பேய் மழையால்
# 300 பேர் பலி



ஆப்கானிஸ்தானில் கொட்டித் தீர்த்த பேய் மழையால் ஒரே நாளில் 300க்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர்.

ஆப்கானிஸ்தானில் பருவமழை கடந்த சில நாட்களாக கொட்டி வருகிறது. இதனால் ஏரி, குளங்கள் நிறைந்த நிலையில், கடந்த வெள்ளி இரவு மீண்டும் கனமழை பெய்தது. இதில், வடக்கு பிராந்தியத்தில் உள்ள பக்லான், தாகர் மற்றும் பதக்ஷன் ஆகிய பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

பக்லானில் மட்டுமே ஒரே நாளில் 300க்கும் மேற்பட்ட மக்கள் மழை வெள்ளத்திற்கு பலியாகியுள்ளதாக ஐ.நாவின் சர்வதேச புலம்பெயர்ந்தோர் அமைப்பும் உலக உணவு அமைப்பும் தெரிவித்துள்ளது.

அங்குள்ள பக்லானி ஜெயித் பகுதியில் மட்டும், 1,500 வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதாக ஐநா அவசரகால மீட்பு அமைப்பின் முகமது பஹிம் தெரிவித்துள்ளார்.

ஆனால், தலிபான் அரசு வெள்ளிக்கிழமை (10) இரவில் 62 பேர் இறந்ததாக அதிகாரப்பூர்வமாக கூறியுள்ளது. அதே சமயம், தலிபான் உள்துறை அமைச்சகம் கனமழை பாதிப்பை தேசிய பேரிடராக அறிவித்து மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ளது.

அர்ஜெண்டினா

# ரயில் மோதியதில் 90 பேர் காயம்

அர்ஜெண்டினாவில் தண்டவாளத்தில் இருந்த வெற்று பெட்டி மீது, பயணிகள் ரயில் மோதிய விபத்தில் 90 பயணிகள் காயமடைந்துள்ளனர்.

அர்ஜெண்டினா தலைநகர் ப்யூனஸ் அயர்சில் இருந்து 7 பெட்டிகளை கொண்ட பயணிகள் ரயில் ஒன்று வடக்கு புறநகர் பகுதிக்கு சனிக்கிழமை (11) சென்று கொண்டிருந்தது.

அப்போது தண்டவாளத்தில் நிறுத்தப்பட்டிருந்த பெட்டி மீது, குறித்த ரயில் வேகமாக மோதி தடம் புரண்டது. சம்பவ இடத்துக்கு வந்த மீட்பு குழுவினர் காயமடைந்த பயணிகளை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.



லண்டன்

### பூமியை தாக்கிய
# பயங்கர சூரிய புயல்



சுமார் 20 ஆண்டுகளுக்குப் பிறகு சக்திவாய்ந்த சூரிய புயல் பூமியை தாக்கியதன் மூலம் உலகின் பல நாடுகளிலும் வானில் தோன்றிய வர்ண ஜாலத்தை மக்கள் கண்டு ரசித்துள்ளனர்.

இந்த சூரிய புயலால் செட்டிலைட், மின் கட்டமைப்புகள் பாதிக்கப்படலாம் எனவும் வானியல் ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

சூரியனில் நிகழும் பிளாஸ்மா மற்றும் மின்காந்த வெடிப்புகள் பூமியை கடந்து செல்வதை சூரிய புயல் என்கிறோம். இந்த காந்தப் புயல் பூமியின் வான்வெளியில் மாற்றங்களை ஏற்படுத்தி பல வர்ண ஜாலங்களை ஏற்படுத்தும்.

இந்நிலையில், சுமார் 20 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது சக்தி வாய்ந்த சூரியப் புயல் பூமியை தாக்கி வருகிறது. சூரியனில் இருந்து பிளாஸ்மா மற்றும் மின்காந்த அலைகளை வெளியிடும் இந்த நிகழ்வு இலங்கை நேரப்படி கடந்த 10ஆம் திகதி இரவு 9.30 மணி அளவில் தொடங்கியதாக அமெரிக்காவின் தேசிய கடல் மற்றும் வானிலை அமைப்பின் (என்ஒஏஏ) விண்வெளி வானிலை கணிப்பு மையம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி, சுவிட்ஸர்லாந்து, டென்மார்க், ஸ்லோவாக்கியா, ஆஸ்திரியா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகளில் பல்வேறு நேரங்களில் பல வண்ண நிறங்களில் வானில் ஜொலிப்பதை மக்கள் வெறும் கண்களால் கண்டு இரசித்துள்ளனர்.

குறிப்பாக இங்கிலாந்து முழுவதும் இந்த நிகழ்வு தென்பட்டுள்ளது. வானில் நிகழ்ந்த இந்த அதிசய வர்ண ஜாலத்தை இரசித்த மக்கள் பலரும் அதை புகைப்படமாக, காணொளியாக எடுத்து சமூக ஊடகங்களில் வெளியிட்டுள்ளனர்.

அடுத்த சில நாட்களுக்கு இந்த சூரிய புயல் நீடிக்கும் என என்ஒஏஏ கணித்துள்ளதால் உலகம் முழுவதும் மக்கள் மத்தியில் ஆர்வம் ஏற்பட்டுள்ளது. அதே சமயம் சூரிய புயலின் தாக்கத்தால் சாட்டிலைட் மற்றும் மின் கட்டமைப்புகள் பாதிக்கப்படலாம் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# ஐ.பி.எல்: தகுதிகாண் போட்டிகளில் கொல்கத்தா



இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) தகுதிகாண் போட்டிகளுக்கு கொல்கத்தா நைட் றைடர்ஸ் தகுதி பெற்றுள்ளது.

கொல்கத்தாவில் சனிக்கிழமை(11) இரவு நடைபெற்ற மும்பை இந்தியன்ஸுடனான போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே தகுதிகாண் போட்டிகளுக்கு கொல்கத்தா தகுதி பெற்றது.

இதுவரையில் 12 போட்டிகளில் விளையாடியுள்ள கொல்கத்தா 18 புள்ளிகளைப் பெற்றுள்ள நிலையில், புள்ளிகள் பட்டியலில் ஐந்தாமிடத்திலுள்ள டெல்லி கப்பிட்டல்ஸ் 12 போட்டிகளில் 12 புள்ளிகளைப் பெற்றுள்ள நிலையில் அடுத்த இரண்டு போட்டிகளில் வென்றாலும் அதிகபட்சமாக 16 புள்ளிகளையே பெற முடியுமென்ற நிலையில், முதல் நான்கு இடங்களை விட கொல்கத்தா கீழிறங்காது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற மும்பையின் அணித்தலைவர் ஹர்திக் பாண்டியா, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா, மழை காரணமாக 16 ஓவர்களைக் கொண்டதான இனிங்ஸொன்றைக் கொண்ட போட்டியில் பில் ஸோல்ட், சுனில் நரைன் ஆகியோரை நுவான் துஷார, ஜஸ்பிரிட் பும்ராவிடம் இழந்தது. அடுத்து வந்த வெங்கடேஷ் ஐயர் வேகமாக ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அணித்தலைவர் ஷ்ரேயாஸ் ஐயர், அன்ஷுல் கம்போஜ்ஜிடம் வீழ்ந்தார். பின்னர் 42 (21) ஓட்டங்களுடன் வெங்கடேஷும் பியூஸ் சாவ்லாவிடம் வீழ்ந்தார்.

அடுத்து வந்த நிதிஷ் ரானா 33 (23) ஓட்டங்களுடன் ரண் அவுட்டானதுடன், அன்ட்ரே ரஸல் 24 (14) ஓட்டங்களுடன் சாவ்லாவிடம் வீழ்ந்தார். பின்னர் றிங்கு சிங் 20 (12) ஓட்டங்களுடன் பும்ராவிடம் விழ, ரமன்டீப் சிங்கின் ஆட்டமிழக்காத 17 (08) ஓட்டங்களுடன் 16 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 158 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மும்பை இஷன் கிஷன் மூலம் வேகமான ஆரம்பத்தைப் பெற்றபோதும் கிஷனை 40 (22) ஓட்டங்களுடன் நரைனிடம் இழந்ததுடன், அடுத்த ஓவரிலேயே துஷாரவுக்குப் பதிலாக தாக்கம் செலுத்தும் மாற்றுவீரராகக் களமிறங்கிய றோஹித் ஷர்மாவை வருண் சக்கரவர்த்தியிடம் இழந்தது.

அடுத்து வந்த சூரியகுமார் யாதவ் ரஸலிடமும், பாண்டியா வருணிடமும், டிம் டேவிட் ரஸலிடமும் வீழ்ந்தனர். பின்னர் நாமன் திர் 17 (06), திலக் வர்மா 32 (17) ஓட்டங்களுடன் ஹர்ஷித் ரானாவிடம் வீழ்ந்த நிலையில், 16 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்த நிலையில் 139 ஓட்டங்களையே பெற்று 18 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக வருண் தெரிவானார்.


இந்நிலையில் அஹமதாபாத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கொல்கத்தாவை குஜராத் டைட்டான்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

# ஒலிம்பிக் தீபத்தை ஏந்திய முதல் இலங்கையர்

ஒலிம்பிக் தீபத்தை ஏந்திய முதல் இலங்கையர் என்ற பெருமையை தர்ஷன் செல்வராஜாவால் வரலாற்றுப் புத்தகத்தில் இணைக்க முடிந்தது.

தர்ஷன் செல்வராஜா ஒரு விருது பெற்ற இலங்கை சமையல்காரர் ஆவார், அவர் பிரான்சில் வசிக்கிறார்.

சாதாரண மக்கள் முதல் உயரதிகாரிகள் வரை சுமார் பத்தாயிரம் பேர் ஒலிம்பிக் தீபம் ஏந்திய பெருமையைப் பெற்றுள்ளதுடன், இவ்வருடம் பிரான்சில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் இவ்வாறு கௌரவிக்கப்படும் 10,000 பேரில் தர்ஷன் செல்வராஜா தெரிவு செய்யப்பட்டு வெற்றிபெற்றுள்ளார்.



2006ஆம் ஆண்டு பிரான்ஸ் வந்தடைந்த பின்னர் தர்ஷன் செல்வராஜா சமையற்காரராகப் பணியாற்றியதோடு, சமையலில் அவருக்கு இருந்த திறமையினால் கிழக்கு பாரிஸில் பேக்கரி ஒன்றைத் திறந்தார்.

அங்கு அவர் தனது திறமைகளை மேம்படுத்துவதற்காக உழைத்திருந்தார், இப்போது உலகில் நன்கு அறியப்பட்ட சமையல்காரராக மாறியுள்ளார்.

ஒடிசா

# பெண்ணிடம் ஆசி பெற்ற மோடி

ஒடிசா மாநிலத்தில் தேர்தல் பிரசாரத்திற்க்காக சென்ற இந்திப் பிரதமர் மோடி, கந்தமாலில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டுள்ளார். அங்கு பத்மஸ்ரீ விருது பெற்ற 80 வயதான பழங்குடியின பெண்ணான கவிஞரும், சமூக ஆர்வலருமான பூர்ணமாசியை பிரதமர் மோடி சந்தித்துள்ளார்.

இவர் குயி, ஒடியா, சம்ஸ்கிருதம் ஆகிய மொழிகளில் 50,000க்கும் மேற்பட்ட பக்தி பாடல்களை பாடியுள்ளார். அவருக்கு சால்வை அணிவித்து மரியாதை செய்த பிரதமர் மோடி, அவரது பாதம் தொட்டு வணங்கி ஆசி பெற்றுள்ளார்.



கர்நாடகா

### கடும் மழையால் வீதியில்
# மிதந்த வாகனங்கள்



கர்நாடக மாநிலம் ஹூப்ளியில் பெய்த கடும் மழை காரணமாக வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதில் வாகனங்கள் மிதந்து சென்றுள்ளன.

கர்நாடாவில் கடந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை, வடகிழக்கு பருவமழை சரியாகப் பெய்யவில்லை. இதனால் மாநிலத்தின் பல பகுதிகளில் கடும் வறட்சி நிலவி வந்துள்ளதுடன், மாநிலம் முழுவதும் தண்ணீர் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. கோடை வெயிலின் தாக்கத்தால் மக்கள் வீடுகளை விட்டு வெளியில் வர முடியாத சூழல் நிலவியது.

இந்நிலையில், கர்நாடாவின் பல மாவட்டங்களில் சனிக்கிழமை(11) முதல் அடுத்த நான்கு நாட்களுக்குக் கடும் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

இதைத் தொடர்ந்து ஹூப்ளி, தார்வாட், சிக்கமங்களூர், விஜயபுர உள்ளிட்ட பகுதிகளில் வெயில் வாட்டிவதைத்த நிலையில், மாலை நேரத்தில் திடீரென கடும் மழை பெய்ததையடுத்து, வீதிகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியுள்ளது.

குறிப்பாக ஹூப்ளியில் ஒரு மணி நேரம் இடி மின்னலுடன், கடும் மழை பெய்துள்ளது. இதனால் அங்குள்ள பெரும்பாலான வீதிகள் ஆறாக மாறி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதுடன், தாழ்வான பகுதிகளில் உள்ள வீடுகளில் தண்ணீர் புகுந்தது, கடைகளிலும் தண்ணீர் புகுந்துள்ளது.

வீதிகளில் மூன்று அடிக்கு மேல் தண்ணீர் தேங்கியுள்ளது. இதனால் வாகனங்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

பல பகுதிகளில் மரங்களும், மின் கம்பங்களும் சாய்ந்துள்ளன. இதனால் பெரும்பாலான பகுதிகளில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

வெயில் வாட்டி வதைத்த நிலையில், மழை மக்களுக்கு மகிழ்ச்சியை அளித்தாலும் மற்றொருபுறம் மக்கள் பெரும் இன்னலுக்கும் ஆளாக்கியுள்ளனர்.



# ஓய்வு பெறும் அன்டர்சன்

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான முதலாவது டெஸ்டுடன் சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக இங்கிலாந்தின் வேகப்பந்துவீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன் தெரிவித்துள்ளார்.

கடந்த 2003ஆம் ஆண்டு அறிமுகத்தை மேற்கொண்ட 42 வயதான அன்டர்சன் 187 டெஸ்ட்களில் 700 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளதோடு, 194 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 269 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார்.

இங்கிலாந்தின் டெஸ்ட் போட்டிகளுக்கான பயிற்றுவிப்பாளர் பிரெண்டன் மக்கலம், நிர்வாக இயக்குனர் றொப் கீயுடனான பேச்சுகளைத் தொடர்ந்து, ஆஷஸைக் கருத்திற் கொண்டு நடப்புப் பருவகாலத்தில் வேறு வேகப்பந்துவீச்சாளர்களைத் தெரிவு செய்யவுள்ளதாக அன்டர்சனுக்கு கூறப்பட்டதைத் தொடர்ந்தே அவர் இந்த முடிவுக்கு வந்துள்ளார்.



### ஜேர்மனிய பெண்டெஸ்லிகா தொடர்:
# மைன்ஸிடம் தோற்ற டொட்டமுண்ட்

ஜேர்மனிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பெண்டெஸ்லிகா (Bundesliga) தொடரில், மைன்ஸின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-3 என்ற கோல் கணக்கில் பொரூசியா டொட்டமுண்ட் தோற்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 13 மே 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.